DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C)
IN THE COURT OF ADDITIONAL SESSIONS JUDGE,
TENKASI.

Calendar
Miscellaneous
Preliminary Register
Sessions **S.C.No.745/2017**

| | | |
|---|---|---|
| Depositions of Witness for | | Prosecution Pw1<br>Defence<br>Court |
| Name | : | திருமதி.லெட்சுமி |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 17th day of February 2023.

(A1 to A3, A5 present. A4 absent. 317 of crpc petition filed and allowed)

**முதல் விசாரணை**

நான் அச்சன்புதூரில் முதலில் சிவகாமிபுரம் காலனியில் இருந்தேன். இப்போது பள்ளிவாசல் தெருவில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்கிறேன். இந்த வழக்கில் இறந்துபோன ராஜகோபால் எனக்கு கணவர் ஆவார். என்னுடைய கணவருக்கு விவசாய நிலங்கள் இருந்தது. ரியல் எஸ்டேட் தொழிலும் செய்து வந்தார். காங்கிரஸ் கட்சியில் செங்கோட்டையில் வட்டார காங்கிரஸ் தலைவராக இருந்தார். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். இந்த வழக்கில் இன்று மனு தாக்கல் செய்த எதிரி

முத்துராஜ் என்பவரையும் தெரியும். 12.08.2015 ல் இரவு 9.30 மணியளவில் நானும் எனது கணவரும் செங்கோட்டைக்கு ஒரு வேலையாக சென்று பேருந்தில் இருந்து இறங்கி அச்சன்புதூர் பஸ் ஸ்டாப்பில் மேற்கே இருந்து கிழக்கு நோக்கி நடந்து வந்துகொண்டிருந்தோம். அங்கு நாகூர்கனி என்கிற பலசரக்கு கடை உள்ளது. அந்த கடை முன்பாக எங்களை மறித்து மகேந்திரா லேகன் கார் நின்றது. அதன் பதிவு எண்.டிஎன் 03 0002 ஆகும். வெள்ளைக் கலர் கார் ஆகும். அதில் இருந்து சாமித்துரை கீழே இறங்கி நீ என்ன சண்டியரா என்று என்னுடைய கணவரின் தோளில் அடித்து வாயைப் பொத்தி வலுக்கட்டாயமாக அந்த காரில் ஏற்றினார். காரில் சாமித்துரை, முத்துராஜ், அய்யப்பன், ராமர், சுப்பையா பாண்டியன் என்கிற முருகையா ஆகிய 5 நபர்கள் வண்டியில் வலுக்கட்டாயமாக ஏற்றி நெடுவயல் ரோட்டில் தெற்கே பார்க்க இலத்தூர் ரோட்டில் சென்றுவிட்டார்கள். அருகில் நின்று கொண்டிருந்த சதீஷ் பாலமுருகன், வீரமணிகண்டன் ஆகியோர்கள் என்னுடைய சத்தம் கேட்டவுடன் பின்னால் வந்தார்கள். கடத்திவிட்டு போவதாக நான் சத்தம் போட்டேன். சிறிதுநேரம் அங்கு பதட்டத்தில் நின்று எல்லாப் பக்கமும் தேடினேன். அதன்பின்பு அச்சன்புதூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். அவ்வாறு நான் கொடுத்த புகார் இது தான். இதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அந்தப் புகார் **அ.சா.ஆ.1** ஆகும். மறுநாள் காலையில் பாளையங்கோட்டை காவல் நிலையத்தில் இருந்து தலையில்லாத ஒரு முண்டம் கிடப்பதாக எனக்கு போன் செய்தார்கள். நான், எனது மகன் தங்கம், 2வது மகன் வெள்ளத்துரை என்ற வெள்ளியப்பன், என்னுடைய கணவரின் அண்ணன் முருகன், என்னுடைய கணவரின் தம்பி ஜானகிராம் என்ற குமார் எல்லோரும் பாளையங்கோட்டையில் திம்மராஜபுரம், முறிக்குளம் என்று கூறுவார்கள். அங்கு சென்றோம். அங்கு தலையில்லாத முண்டம் கிடந்தது. என்னுடைய கணவருக்கு 2 வருடங்களுக்கு முன்பாக இதயத்தில் ஆப்ரேஷன் செய்யப்பட்டிருந்தது. காலில் பெருவிரலில் நகம் உயரமாக தூக்கி இருக்கும். அப்போது அந்த தழும்பை வைத்தும், பெருவிரல் நகம் உயரமாக இருப்பதை வைத்தும் என்னுடைய கணவர் என்று அந்த உடலை அடையாளம் காட்டினேன். அந்த உடலில் வெள்ளைக்கலர் சட்டை, வெள்ளைக் கலர் பனியன், மஞ்சள் கலர் பார்டர் உள்ள வெள்ளை வேஷ்டி, ஆர்கேஜி என்ற நீலக்கலர் ஜட்டி இருந்தது. பாளையங்கோட்டையில் எஸ்.ஐ அந்த இடத்தில் தலை எதுவும் கிடைக்கிறதா என்று தேடிப்பார்த்தார்கள். சிறிது தூரத்தில்

தக்கல் நகர் பக்கத்தில் தலை இருப்பதாக கூறியவுடன் அங்கு சென்று பார்த்தோம். அப்போது அங்கு நான், எனது மகன்கள், எனது கணவரின் அண்ணன், தம்பி எல்லோரும் சென்று பார்த்தபோது தலை எரிந்த நிலையில் இருந்ததால் எனக்கு அடையாளம் கூற இயலவில்லை. பற்கள் தனியாக துாரக் கிடந்தது. போலீசார் அந்த இடத்தில் பரிசோதனை செய்து தலையை பரிசோதனைக்கு அனுப்பி வைத்தார்கள். நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட அந்த காரைப் பார்த்தேன். எதிரி சாமித்துரை காரை பைனான்சில் வாங்கியிருந்தார். பைனான்ஸ் கட்டாமல் இருந்தார். அந்தக் காரை பைனான்ஸ்காரர்கள் எடுத்துச் சென்றுவிட்டார்கள். அதற்கு என்னுடைய கணவர் தான் காரணம் என்று விரோதமாக இருந்தார்கள். இதய அறுவை சிகிச்சை செய்ததற்கான தழும்பு, அவர் உடுத்தியிருந்த சட்டை, வேஷ்டி, கால் பெருவிரலின் நகம் உயரமாக இருக்கும் இவற்றை வைத்து என்னுடைய கணவர் என்று அடையாளம் காண்பித்தேன். என்னுடன் எனது மகன்களும், எனது கணவரின் உடன்பிறந்த அண்ணன், தம்பி ஆகியோர்களும் எனது கணவரை உடலை அடையாளம் காட்டினார்கள். நீதிமன்றத்தில் இன்று நான் பார்த்த காரில் தான் எனது கணவரைக் கடத்திக்கொண்டு சென்றார்கள். டிஎன் 03 – 0002 பதிவெண் கொண்ட வெள்ளை நிற மகேந்திரா லேகன் கார் **சா.பொ.1** ஆகும். என்னிடம் காண்பிக்கும் மஞ்சள் நிற பார்டருடன் கூடிய கிழிந்த வேஷ்டித் துண்டு **சா.பொ.2** ஆகும். ரத்தக்கறையுடன் எரிந்தும் எரியாத நிலையில் முடிச்சுப்போட்ட கிழிந்த வேஷ்டித் துண்டு என்னுடைய கணவருடையது தான். அது **சா.பொ.3** ஆகும். என்னிடம் காண்பிக்கப்படும் எரிந்த நிலையில் ஆர்கேஜி என்ற அடையாளம் உள்ள ஊதாக்கலர் ஜட்டி என்னுடைய கணவருடையது ஆகும். அது **சா.பொ.4** ஆகும். எரிந்த நிலையில் என்னிடம் காண்பிக்கப்படும் வெள்ளை பனியனின் துண்டு என் கணவருடையதாகும். அது **சா.பொ.5** ஆகும். எரிந்த நிலையில் என்னிடம் காண்பிக்கப்படும் வெள்ளை சட்டை என் கணவருடையதாகும். அது **சா.பொ.6** ஆகும். இந்த வழக்கு சம்பந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

நான் குடியிருந்து வந்த சிவகாமிபுரம் காலனிக்கும், என் கணவரைக் கடத்திச் சென்றதாகக் கூறும் இடத்திற்கும் இடையே அரை கிலோமீட்டர் துாரத்தில் தென்புறம் உள்ளது. நான் குடியிருந்து வந்த சிவகாமிபுரம் காலனிக்கும் என் கணவரைக் கடத்திச்

சென்றதாகக் கூறும் இடத்திற்கும் இடையே மணக்காட்டுத்தெரு, அச்சன்புதூர், நெடுவயல் ஆகிய ஊர்கள் உள்ளது. செங்கோட்டைக்கு வீட்டில் இருந்து மாலை 6 மணிக்கு புறப்பட்டோம். செங்கோட்டைக்கும் எங்களது வீட்டிற்கும் 6 கி.மீ தூரம் இருக்கும். எங்கள் வீட்டில்இருந்து புறப்பட்டு பஸ் ஸ்டாண்டிற்கு வந்து அங்கிருந்து தான் செங்கோட்டைக்கு சென்றோம். என்னுடைய பூர்வீக ஊர் அச்சன்புதூர், பள்ளிவாசல் தெருவாகும். அதனால் அச்சன்புதூரில் இருந்து நெடுவயல் ரோட்டில் உள்ள கடைகள், வீடுகள் பற்றி எனக்கு தெரியும். அச்சன்புதூர் ரோட்டின் வடபுறம் நாகூர்கனி மளிகைக்கடை உள்ளது. அவரது கடைக்கு கீழ்புறம் ஷெரீப், அயூப் ஆகியோர்களின் வீடுகள் உள்ளது என்றால் சரிதான். நாகூர்கனி மளிகைக்கடைக்கு மேல்புறம் தங்கம்மன்கோவில் தெரு உள்ளது. அதற்கு மேல்புறம் சங்கர் டாக்டர் கிளினிக் மற்றும் அயூப் வீடு உள்ளது. அதற்கு தென்புறம் துரையப்பா பெட்டிக்கடை, ஜார்ஜ் தண்ணீர் கடை, வேலுச்சாமி சரக்குக்கடை, வேலுச்சாமி, சேதுமுத்து பூக்கடை ஆகியோர்களது கடைகள் உள்ளது. என்னுடைய கணவர் அரசியல் செல்வாக்கு மிகுந்தவர் என்பதால் இந்த ரோட்டின் இருபுறமும் உள்ள நபர்களுக்கு எனது கணவரைத் தெரியும். சாமித்துரை, அயூப் என்பவர் வீட்டில் வாடகைக்கு இருந்தார். அதனால் எனக்கு அவரைத் தெரியும். நாங்கள் நடந்து வந்துகொண்டிருந்த இடத்திற்கும் எங்கள் வீட்டிற்கும் இடையே அரை கிலோமீட்டர் தூரம் தான் இருக்கும். பஸ்ஸில் இருந்து இறங்கி 12 அடி தூரம் நடந்து வந்துகொண்டிருந்தோம். எதிரிகள் காரில் குறுக்கே வந்து மறித்து நின்றார்கள். புகார் எழுதும் போது சாமித்துரை பெயர் தெரியாது. ஆனால் ஆளைத் தெரியும். அதனால் நான் கொடுத்த புகாரில் சாமித்துரையின் பெயர் எழுதவில்லை. புகாரில் சாமித்துரையின் பெயர் தெரியாது. ஆளைத் தெரியும் என்று எழுதவில்லை என்றால் பதட்டத்தில் எழுதவில்லை. புகாரில் 5, 6 என்று எழுதப்பட்டு 6 அடிக்கப்பட்டிருக்கிறது என்றால் சரிதான். எனது கணவரை கடத்திச் செல்லும் போது நான் தடுக்கவில்லை ஆனால் சத்தம் போட்டேன். புகாரில் ஒரு நபர் எனது கணவரின் வாயைப் பொத்தியதாகக் கூறியிருக்கிறேன். அந்த ஆளின் பெயரைக் குறிப்பிட்டுக் கூறவில்லை. அன்றைய தினம் என் கையில் செல்போன் வைத்திருக்கவில்லை. என் கணவரைக் கடத்திச் சென்ற இடத்தின் அருகில் உள்ள கடைகளில் தொலைப்பேசி வசதிகள் உள்ளது. அந்த தொலைப்பேசியின் மூலமாக நானோ, யாரிடமும் கூறியோ போலீசிற்கு தகவல் கூறவில்லை. அந்த இடத்தில்

இருந்து காவல் நிலையம் கால் கிலோமீட்டர் துூரத்தில் தான் உள்ளது. சம்பவம் நடந்தவுடன் உடனடியாக காவல் நிலையத்திற்கு செல்லவில்லை. பதட்டத்தில் சிறிது நேரம் அங்கு இருந்து பின்பு சென்றேன். நான் பார்த்த காரின் பின்னால் எஸ்.ஜெ.ரத்தினவேல் பாண்டியன் என்று எழுதப்பட்டிருந்தது. அந்த எழுத்தை வைத்து தான் நான் அடையாளம் பார்த்தேன். புகாரில் எனது கணவர் அணிந்திருந்த வேஷ்டி, சட்டை மற்றும் உடைகள் விபரங்களை கூறவில்லை. புகாரில் எனது கணவரின் உயரம், நிறம் மற்றும் அங்க அடையாளங்களைப் பற்றிக் கூறவில்லை. மாலையில் டீ சாப்பிட்டுவிட்டு எனது கணவர் என்னுடன் வந்தார். செங்கோட்டையிலும் டீ தான் குடித்தோம். எனக்கு எழுதப்படிக்கத் தெரியும். புகாரை என்னுடன் வந்த உறவினர் எழுதினார். நான் எழுதவில்லை. யார் எழுதினார்கள் என்று ஞாபகம் இல்லை. அச்சன்புதுார், நெடுவயல் ரோட்டில் வைத்து இந்த புகாரை எழுதினார். என்னுடைய கணவர் அரசியலில் இருந்ததால் கட்டப்பஞ்சாயத்து செய்யும் வழக்கம் இருந்தது என்றால் சரியல்ல. என்னுடைய கணவர் கட்டப்பஞ்சாயத்து செய்ததாகவும், மோசடி செய்ததாகவும் செங்கோட்டை மற்றும் அச்சன்புதுார் காவல்நிலையங்களில் பல வழக்குகள் நிலுவையில் இருந்தது என்றால் சரியல்ல. செங்கோட்டை நீதிமன்றத்திலும் என் கணவர் மீது குற்ற வழக்கு நிலுவையில் இருந்தது என்றால் சரியல்ல. அதனால் என் கணவருக்கு ஊரில் நிறைய விரோதிகள் இருந்தார்கள் என்றால் சரியல்ல. என் கணவரை வாயைப் பொத்தியதால் அவரால் சத்தம் போடமுடியவில்லை. நான் தான் சத்தம் போட்டேன். நான் போட்ட சத்தத்தைக் கேட்டு கடைக்காரர்கள் வந்து தடுத்தார்களா என்றால் தடுக்கவில்லை அதற்குள் வண்டி வேகமாக சென்றுவிட்டது. மறுநாள் காலையில் பாளையங்கோட்டையில் வைத்து காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார். சவம் கிடந்ததை மட்டும் தான் கேட்டார்கள். 31ம் தேதியன்று என்னை அடையாளம் காட்டுமாறு கூட்டிச் சென்றார்கள். புகாரில் 5 நபர்கள் என்று தான் கூறியிருக்கிறேன். அவர்களின் அங்க அடையாளங்களைக் கூறவில்லை. நான் அடையாளம் காட்டிய கார் எந்த பைனான்சில் எடுத்தார்கள் என்று எனக்கு தெரியாது. அந்த கார் யார்பெயரில் இருந்தது, அதன் உரிமையாளர் யார் என்று எனக்கு தெரியாது. அந்தக் கார் பைனான்சில் இருந்ததாகவும், அதை 1ம் எதிரி பைனான்ஸ் கட்டாமல் இருந்ததாகவும் அதை பைனான்ஸ் காரர்கள் எடுத்துச் சென்றதாகவும் அதற்கு எனது கணவர் தான் காரணம் என்று 1ம் எதிரி விரோதம் கொண்டதாகவும் வழக்கிற்காக

பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என்னுடைய கணவரின் கால் விரல் அடையாளத்தைப் பற்றியும் மற்றும் இதய அறுவை சிகிச்சை செய்ததற்கான அடையாளத்தைப் பற்றியும் புகாரில் கூறவில்லை. இதய அறுவை சிகிச்சை செய்த எல்லோருக்கும் தழும்பு இருக்கும் அதை வைத்து என்னுடைய கணவர் என்று அடையாளம் காட்ட இயலாது என்றால் சரியல்ல. எனது கணவரின் உடலில் இருந்த மச்சங்கள் குறித்து அடையாளங்கள் காண்பிக்கப்படவில்லை என்றால் சரிதான். நான் அடையாளம் காட்டியதாகக் கூறும் பிணம் என்னுடைய கணவருடையதல்ல என்றால் சரியல்ல. சதீஷ் பாலமுருகன், வீரமணிகண்டன் சிவகாமிபுரம் காலனியில் குடியிருந்து வந்தார்கள். அவர்கள் என்னுடைய உறவினர்கள் கிடையாது. நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்பட்ட கிழிந்த துணிகள் என்னுடைய கணவருடையது கிடையாது என்றால் சரியல்ல. சா.பொ.1 முதல் 6 வரையானவை என்னுடைய கணவருடையது கிடையாது என்றும் அதனால் தான் அவற்றைப் பற்றி புகாரில் கூறவில்லை என்றால் சரியல்ல. அச்சன்புதூர் பஸ் ஸ்டாண்டில் வாடகைக்கு கார்கள், ஆட்டோக்கள் நிற்கும் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தலை அடையாளம் காண்பிக்கச் சென்றதாகவும் அது எரிந்த நிலையில் இருந்ததால் கண்டுபிடிக்க இயலவில்லை என்றும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. ரத்தினவேல் பாண்டியன் என்று எழுதப்பட்டக் காரில் என்னுடைய கணவரை கடத்திச் சென்றதாகக் கூறுவது உண்மையல்ல என்றால் சரியல்ல. ஏனெனில் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட காரில் ரத்தினவேல் பாண்டியன் என்று எழுதப்படவில்லை என்றால் சரியல்ல. பிரேத விசாரணை செய்யும் போது நானும் எனது மகன்கள், எனது கணவரின் அண்ணன், தம்பி ஆகியோர்கள் இருந்தோம். அப்போது என்னுடன் அச்சன்புதூர் பள்ளிவாசல் தெருவைச் சேர்ந்த முருகன்(அண்ணன்), தென்காசி ஹவுசிங் போர்டு காலனியைச் சேர்ந்த செந்தூர்பாண்டியன், மணிமுத்தாறு போலீஸ் ஹவுசிங் சப் காண்ட்ராக்டர் சகாய சுந்தர், சிவகாமிபுரம் காலனியைச் சேர்ந்த இசக்கித்தேவர், அச்சன்புதூர் பள்ளிவாசல் தெருவைச் சேர்ந்த ஜானகிராமன் ஆகியோர்கள் உடன் இருந்தார்கள். அப்போது சம்பவ இடத்தின் அருகில் இருந்த நாகூர்கனி, அயூப், ஜார்ஜ், வேலுச்சாமி, சேதுமுத்து, துரைப்பாண்டி ஆகியோர்கள் அப்போது உடன் இருக்கவில்லை. மறுநாள் பாளையங்கோட்டை அரசு மருத்துவமனையில் இருந்து இறந்த உடலை நல்லடக்கம் செய்வதற்கு பெற்றேன். கொக்கிரகுளம்

சிறைச்சாலையில் வைத்து எதிரிகளை அடையாளம் காட்டினேன். வழக்கு சம்பவத்திற்கு 20 நாட்கள் கழித்து எதிரிகளை அடையாளம் காட்டினேன். கொக்கிரகுளம் சிறைச்சாலைக்கு வீட்டில் இருந்து உறவினர்களுடன் சென்றேன். அங்கு போலீஸ்காரர்கள் இருந்தார்கள். யார் யார் இருந்தார்கள் என்று தெரியாது. அங்கு போலீஸ்காரர்கள் என்னிடம் எதிரிகளின் புகைப்படங்களைக் காண்பித்து என்னென்ன நபர்கள் என்று சொன்னார்கள் என்றால் சரியல்ல. போலீஸ்காரர்கள் கூறியதன் பேரில் தான் எதிரிகளை சிறைச்சாலையில் வைத்து அடையாளம் காட்டினேன் என்றால் சரியல்ல. நான் எனது கணவருடன் நடந்து வந்துகொண்டிருந்ததாகவும் அப்போது எதிரிகள் எனது கணவரை கடத்திச் சென்றதாகவும் கூறும் சம்பவமே நடைபெறவில்லை என்றால் சரியல்ல. எதிரிகள் ரத்தினவேல் பாண்டியன் என்று எழுதப்பட்ட காரில் கடத்திச் சென்றதாகக் கூறுவதும் உண்மையல்ல என்றால் சரியல்ல. எனக்கு வழக்கு விபரம் எதுவும் தெரியாது என்றும் இறந்தவர் கணவர் என்பதால் போலீஸ்காரர்கள் கூறியதன் பேரில் சாட்சியம் அளிக்கிறேன் என்றும், நான் அடையாளம் காட்டியதாகக் கூறும் இறந்த உடல் என்னுடைய கணவரின் உடல் அல்ல என்று சொன்னாலும் சரியல்ல. எதிரிகள் மீது பொய் வழக்கு போடவேண்டும் என்பதற்காக வழக்கிற்கு சம்பந்தம் இல்லாத தடயங்களை கைப்பற்றி எதிரிகள் மீது பொய் வழக்கு பதிவு செய்யப்பட்டிருக்கிறது என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை இல்லை</u>**

G ANURADHA Digitally signed by G ANURADHA
Date: 2023.02.17 17:21:06 +0530

# DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C)
IN THE COURT OF ADDITIONAL SESSIONS JUDGE,
TENKASI.

Calendar
Miscellaneous
Preliminary Register
Sessions **S.C.No.745/2017**

| | | |
|---|---|---|
| Depositions of Witness for | | Prosecution Pw2<br>Defence<br>Court |
| Name | : | திரு.சதீஷ் பாலகுமார் |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the $17^{th}$ day of February 2023.

(A1 to A3, A5 present. A4 absent. 317 of crpc petition filed and allowed.)

**முதல் விசாரணை**

நான் நெடுவயல் சிவகாமிபுரம் காலனியில் குடியிருந்து வருகிறேன். கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1 ஐ தெரியும். இந்த வழக்கில் இறந்துபோன அ.சா.1 ன் கணவர் ராஜகோபாலைத் தெரியும். ஆஜர் எதிரிகளைத் தெரியும். நானும், எனது நண்பர் வீரமணியும் அச்சன்புதூர் பஸ் ஸ்டாண்டில் இருந்து 12.08.2015 ல் இரவு 9.30 மணியளவில் நெடுவயலை நோக்கி வந்துகொண்டிருந்தோம். எங்களுக்கு முன்பாக 10 அடி துூரத்தில் ராஜகோபாலும் அவருடைய மனைவியும் போய் கொண்டிருந்தார்கள். நாகூர்கனி கடைக்கு முன்பாக ஒரு கார் வந்தது. காரின் பதிவு எண்.டிஎன் 03 0002 ஆகும். அந்தக் காரில்

இருந்து சாமித்துரையும், உடன் 4 நபர்கள் இறங்கினார்கள். நீதான் சண்டியரா என்று கூறி சாமித்துரை சண்டியர் என்ற ராஜகோபாலை முதுகில் கையால் அடித்தார். வலுக்கட்டாயமாக ராஜகோபாலை இழுத்து வாயைப் பொத்தி காரில் அழைத்துச் சென்றார்கள். வெள்ளை நிறக் காராகும். நாங்கள் சத்தம் போட்டோம். இலத்தூர் நோக்கி கார் சென்றது. விசாரித்த போது எதிரிகளுக்கும் ராஜகோபாலுக்கும் கார் பிரச்சனை என்று சொன்னார்கள். அதனால் கடத்திக்கொண்டு சென்றிருக்கிறார்கள். காரைப் பார்த்ததால் என்னால் அடையாளம் காட்ட முடியும். இது சம்பந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

அ.சா.1 எனது வீட்டின் பக்கத்தில் வாடகைக்கு இருந்தார். வழக்கு சம்பவத்திற்கு முன்பாகவே அ.சா.1 ஐயும் அவரது குடும்பத்தாரையும் எனக்கு தெரியும். 12.08.2015 ம் தேதி இரவு மெடிக்கல் ஷாப்பிற்கு செல்வதற்காக அங்கு வந்தேன். பஸ் ஸ்டாண்ட் பக்கத்தில் மெடிக்கல் ஷாப் உள்ளது. மருந்து வாங்கி நடந்து வந்துகொண்டிருந்தபோது இந்த வழக்கு சம்பவம் நடந்தது. நான் நடந்து வந்து கொண்டிருந்த இடத்தில் இருந்து 15 அடி தூரத்தில் சம்பவம் நடந்தது. என்னால் தடுக்க முடியவில்லை. அந்த நேரத்தில் பஸ், பைக் எல்லாம் வந்துகொண்டிருந்தது. பக்கத்தில் உள்ளவர்கள் காவல் நிலையத்திற்கு போன் செய்தார்கள். அவர்கள் காவல் நிலையத்திற்கு போன் செய்தபோது இரவு 9.30 மணி இருக்கும். சண்டியரை தூக்கிக் கொண்டு சென்ற பிறகு 15 நிமிடங்கள் அ.சா.1 அங்கு இருந்தார்கள். அங்கிருந்து காவல் நிலையம் அரை கி.மீ தூரத்தில் இருந்தது. அ.சா.1 ன் மகன் அங்கு வந்ததால் நான் அ.சா.1–வுடன் காவல் நிலையத்திற்கு செல்லவில்லை. லெட்சுமியும் அவரது மகனும் காவல் நிலையத்திற்கு சேர்ந்து சென்றார்களா என்று எனக்கு தெரியாது. அ.சா.1–ன் மகன் வெள்ளத்துரை அங்கு வந்தவுடன் நான் சென்றுவிட்டேன். மறுநாள் நான் ரோட்டில் நின்று கொண்டிருந்தபோது மதியம் 12 ல் இருந்து 1 மணிக்குள் போலீசார் என்னை விசாரித்தனர். நான் கூறிய வாக்குமூலத்தை அவர்கள் எழுதிக்கொண்டார்கள். அதில் நான் கையெழுத்து போடவில்லை. போலீசார் விசாரித்தபோது 12.08.2015 அன்று இரவு 9.30 மணிக்கு நானும் எனது நண்பரும் சென்று கொண்டிருந்தபோது எங்களுக்கு முன்னால் 10 அடி தூரத்தில் அ.சா.1 ம், அவரது கணவரும் சென்றபோது சம்பவம் நடந்ததாக கூறியிருக்கிறேன். காரின் பின்னால் ஏதோ ஒரு பெயர் எழுதப்பட்டிருந்தது. என்னபெயர் என்று எனக்கு தெரியாது. மறுநாள் போலீசார் என்னை விசாரித்தபின்பு வழக்கு சம்பந்தமாக பின்பு 30 அல்லது 31 ம் தேதி திருநெல்வேலிக்கு போலீசார் என்னை அழைத்து வந்தார்கள். காரில் கடத்தி

சென்றவர்களை என்னிடம் காண்பிக்கச் சொன்னார்கள். திருநெல்வேலி சப் ஜெயிலுக்கு என்னை வரச் சொல்லியிருந்தார்கள். கடத்திச் சென்ற ஆட்கள் இவர்கள் தானா என்று கேட்டார்கள். என்னை விசாரிக்கும் போது சண்டியரைக் கடத்திச் சென்ற ஆட்களின் அங்க அடையாளங்களை நான் கூறவில்லை. நான் திருநெல்வேலிக்கு செல்லும் போது போலீசார் அங்கு இருந்தனர். என்னை ஆய்வாளர் அறிமுகப்படுத்தினார். அறிமுகப்படுத்துவதற்கு முன்பாக எதிரிகளின் புகைப்படங்களைக் காண்பித்து அவர்களின் பெயர்களைச் சொன்னார்களா என்றால் இல்லை. நான் அடையாளம் காட்டுவதற்கு முன்பாக எதிரிகளின் புகைப்படங்களை என்னிடம் காண்பித்து விபரங்கள் கூறினார்களா என்றால் இல்லை. சம்பவத்திற்கு மறுநாள் போலீசார் என்னை விசாரிக்கும் போது எதிரிகளின் அங்க அடையாளங்களைப் பற்றி தெரியததால் தான் அவற்றைப் பற்றி நான் கூறவில்லை என்றால் சரியல்ல. 12.08.2015ம் தேதி இரவு 9.30 மணிக்கு நானும், வீரமணிகண்டனும் அச்சன்புதூர் பஸ் ஸ்டாப்பில் இருந்து நடந்து சென்றுகொண்டிருந்தபோது எங்களுக்கு முன்னால் ராஜகோபாலும் அவரது மனைவியும் நடந்து சென்றார்கள் என்றும் அப்போது நாகூர்கனி கடைக்கு முன்பாக டிஎன் 03 0002 என்ற பதிவெண் கொண்ட காரில் இருந்து சாமித்துரை மற்றும் அடையாளம் காட்டக்கூடிய நபர்கள் இறங்கி வந்து சாமித்துரை ராஜகோபாலைப் பார்த்து நீதான் சண்டியரா என்று கேட்டு முதுகில் அடித்து மற்ற 4 நபர்களுடன் சேர்ந்து வாயைப் பொத்தி கடத்திச் சென்றதாகக் கூறுவது பொய் என்றால் சரியல்ல. கடத்திச் சென்றதாகக் கூறுவதற்கு முன்பாகவே சாமித்துரையை எனக்கு தெரியும். நான் கூறுவதுபோல வழக்கு சம்பவம் நடைபெறவில்லை என்றும் நான் பார்த்ததாகக் கூறுவதும் பொய் என்றும், அவ்வாறு விசாரணை செய்தபோது கார் பிரச்சனை இருந்ததாக கூறியதும் பொய் என்றால் சரியல்ல. எனக்கு வழக்கு விபரங்கள் எதுவும் தெரியாது என்றும் அ.சா.1 எனது பக்கத்து வீட்டில் இருந்ததால் அவர் கூறியதன் பேரில்பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

G ANURADHA Digitally signed by G ANURADHA
Date: 2023.02.17 17:21:19 +0530

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C)
IN THE COURT OF ADDITIONAL SESSIONS JUDGE,
TENKASI.

Calendar
Miscellaneous
Preliminary Register
Sessions **S.C.No.745/2017**

| | | |
|---|---|---|
| Depositions of Witness for | | Prosecution Pw3<br>Defence<br>Court |
| Name | : | திரு.வீரமணிகண்டன் |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 17th day of February 2023.

(A1 to A3, A5 present. A4 absent. 317 of crpc petition filed and allowed)

**முதல் விசாரணை**

நான் நெடுவயல் சிவகாமிபுரம் காலனியில் குடியிருந்து வருகிறேன். ஒர்க்ஸ் ஷாப் வைத்திருக்கிறேன். இந்தவழக்கில் சாட்சியம் அளித்த லெட்சுமி மற்றும் சதீஷ் பாலகுமார் ஆகியோர்களைத் தெரியும். ஆஜர் எதிரிகளைத் தெரியும். மற்றொரு எதிரி முத்துராஜ் என்பவரைத் தெரியும். வழக்கில் இறந்துபோன ராஜகோபாலைத் தெரியும். 12.08.2015 ம் தேதி இரவு 9.30 மணியளவில் நானும், சதீஷ் பாலகுமாரும் மெடிக்கல் ஷாப்பிற்கு சென்றிருந்தோம். அச்சன்புதூர் பஸ் ஸ்டாண்டின் அருகே மெடிக்கலில் மாத்திரை வாங்கிக் கொண்டு நெடுவயல் நோக்கி நானும், சதீஷ் பாலகுமாரும்

வந்துகொண்டிருந்தோம். எங்களுக்கு முன்பாக ராஜகோபாலும் அவரது மனைவி லெட்சுமியும் சென்றுகொண்டிருந்தார்கள். நாகூர்கனி சூப்பர் மார்க்கெட் அருகே வண்டி எண். டிஎன் 03 0002 என்ற வெள்ளைக் கலர் காரில் சாமித்துரை வந்தார். நீ தான் ராஜகோபாலா என்று ராஜகோபாலை சாமித்துரை கேட்டு முதுகில் அடித்தார். அப்போது சாமித்துரை, சுப்பையா பாண்டி, ராமர், ஐயப்பன் ஆகியோர்கள் காரில் வாயைப் பொத்தி ராஜகோபாலை கடத்தி இலத்துார் ரோட்டில் சென்று விட்டார்கள். நாங்கள் சத்தம் போட்டோம். வண்டி வேகமாக சென்றுவிட்டது. நாங்கள் சத்தம் போட்டும் வண்டி நிற்கவில்லை. காரைப் பார்த்தால் என்னால் அடையாளம் காட்ட முடியும். ராஜகோபால் சாமித்துரைக்கு பைனான்சிற்கு கார் வாங்கிக் கொடுத்தது சம்பந்தமாக பிரச்சனை என்று சொன்னார்கள். இந்த வழக்கு சம்பந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

சிவகாமிபுரம் காலனியில் இறந்துபோன ராஜகோபால் என்ற சண்டியர் 3 வருடமாக குடியிருந்தார். அவர் காங்கிரஸ் கட்சியில் நகரச் செயலாளராக இருந்தார். அவருடைய மனைவி அ.சா.1 லெட்சுமி வார்டு மெம்பராக இருந்தார். ராஜகோபால் என்ற சண்டியர் ஊரில் கட்டப்பஞ்சாயத்து செய்வாரா என்றால் எனக்கு தெரியாது. அவ்வாறு கட்டப்பஞ்சாயத்து செய்து அச்சன்புதுார் செங்கோட்டை காவல் நிலையங்களில் அவர் மீது வழக்குகள் பதிவு செய்யப்பட்டிருக்கிறது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அ.சா.1 ஊரில் பிரச்சனை என்றால் அதை தீர்த்து வைப்பார் என்றும் காவல் நிலையங்களுக்கு சென்று பிரச்சனைகளை தீர்த்து வைப்பார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. ராஜகோபால் ஊரில் கட்டப்பஞ்சாயத்து செய்வதால் அவருக்கு உள்ளூரிலும் வெளியூரிலும் விரோதிகள் இருக்கிறார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. சாட்சி சதீஷ் பாலகுமார் என்னுடைய நண்பர் ஆவார். சதீஷ் பாலகுமாரின் அம்மாவிற்கு மாத்திரை வாங்கச் சொன்னதால் நாங்கள் சம்பவ இடத்திற்கு வந்தோம். 10 அடி துாரத்தில் மேற்கே இருந்து நாங்கள் பார்த்தோம். அரை கி.மீ–ல் இருந்து முக்கால் கி.மீ துாரத்தில் காவல் நிலையம் உள்ளது. சம்பவம் நடந்த உடனே எனது கைப்பேசி மூலமாகவோ மற்றவர்களின் தொலைப்பேசியின் மூலமாகவோ காவல் நிலையத்திற்கு தகவல் தெரிவிக்கவில்லை. பஸ் ஸ்டாண்ட் பக்கத்தில் டேக்ஸி, ஆட்டோக்கள் உள்ளது. அங்கிருந்து வண்டி ஏதேனும் எடுத்துக்கொண்டு நானோ சதீஷ் பாலகுமாரோ காரை பின் தொடரவில்லை. நான் அ.சா.1 லெட்சுமியை அழைத்துக் கொண்டு சென்று காவல் நிலையத்தில் புகார் அளிக்கவில்லை. ராஜகோபால் உள்ளி விவசாயம் செய்து வந்தார். எவ்வளவு நிலங்கள் அவருக்கு உள்ளது என்று எனக்கு தெரியாது. அந்த இடத்தில் நாகூர் கனி அவருடைய கடையாட்கள் மற்றும்

நபர்கள் கூட்டமாக இருந்தார்கள். எத்தனை நபர்கள் இருந்தார்கள் என்று எனக்கு தெரியாது. நாகூர்கனியின் கடையில் இருந்து தென்கிழக்கே இலத்துார் என்ற ஊர் 3 கி.மீ துாரத்தில் உள்ளது. இலத்துார் செல்வதற்கு நெடுவயல் வந்து தான் செல்லவேண்டும். நெடுவயல் என்பது நாகூர்கனி கடையில் இருந்து கிழக்கே வந்து தெற்கே செல்லவேண்டும். இந்த நீதிமன்றத்திற்கு சாட்சி சொல்வதற்கு போலீசார் நேற்று எனக்கு அழைப்பாணை கொடுத்தார்கள். அதில் இருந்து நான் போலீசின் கஸ்டடியில்தான் இருக்கிறேன் என்றால் சரியல்ல. என்னையும் அ.சா.2 சதீஷ் பாலகுமாரையும் போலீசார் ஒருவார காலமாக அவர்களுடைய பாதுகாப்பில் வைத்து திரும்ப திரும்ப விபரங்களைச் சொல்லிக் கொடுத்தன் பேரில் நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ராஜகோபால் பைனான்ஸ் மூலமாக சாமித்துரைக்கு கார் வாங்கிக் கொடுத்தார் என்ற விபரம் எனக்கு நேரடியாக தெரியாது. 12.08.2015ம் தேதி இரவு 9.30 மணிக்கு நாங்கள் சென்றபோது எங்களுக்கு முன்பாக லெட்சுமியும் அவரது கணவரும் சென்றதாகக் கூறுவது பொய் என்றால் சரியல்ல. அவ்வாறு சென்றுகொண்டிருந்தபோது டிஎன் 03 0002 என்ற பதிவெண் கொண்ட காரில் சாமித்துரையும் மற்ற 4 நபர்களும் வந்து ராஜகோபாலை வாயில் பொத்தி கடத்திச் சென்றார்கள் என்று கூறுவது பொய் என்றால் சரியல்ல. மறுநாள் அச்சன்புதுாரில் வைத்து காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார். அவ்வாறு விசாரணை செய்த போது நான் கூறிய விபரங்களை அவர்எழுதிக்கொண்டார். அதில் நான் கையெழுத்திடவில்லை. வழக்கு சம்பந்தமாக என்னை விசாரித்து 8 ஆண்டுகள் ஆகிறது. முதல் விசாரணையில்கூறிய விபரங்கள் போலீசார் கூறிய விபரங்களை நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை இல்லை</u>**

G ANURADHA Digitally signed by G ANURADHA
Date: 2023.02.17 17:21:29 +0530